வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.2210/ஆ3/2022 நாள் .07.2022

----

பொருள் : பள்ளிக் கல்வி – ஆதிதிராவிடர் நலம் – 2022-2023ஆம் கல்வியாண்டிற்கான அனைத்து அரசு / நிதி உதவி பெறும் / உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ / மாணவியர்களுக்கு ப்ரி மெட்ரிக் – போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவி தொகை பெற விண்ணப்பங்கள் உடன் பெற்று கொண்டு இணையதளத்தில் உள்ளீடு செய்தல் – சார்ந்து.

பார்வை : மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் வேலூர் அவர்களின் கடித ந.க.எண்.கே6/2902/2021 நாள் 28.06.2022 (கடிதம் இணையதள மூலமாக பெறப்பட்ட நாள் 04.07.2022)

----

வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 2022-2023ஆம் கல்வி ஆண்டிற்கான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நல மாணவ மற்றும் மாணவியர்களுக்கான ப்ரிமெட்ரிக் மற்றும் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவி தொகை மாணவர்களுக்கு பெற்று வழங்க அனைத்து தலைமை ஆசிரியர்கள் உடன் வேலூர் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்திற்கு சென்று உரிய கல்வி உதவி தொகைக்கான விண்ணப்பங்களை பெற்று கொள்ளுமாறும், மேலும், விண்ணப்பங்களின் தேவைப்பட்டியல் தயார் செய்து முழுமையான அளவில் இணைப்புகளுடன் dadwo37@yahoo.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு உடன் அனுப்பிவைக்குமாறு அனைத்து வகை உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

எனவே மாணவர்களுக்கு கல்வி உதவி தொகை பெற்று வழங்குவதில் எவ்வித புகார்களுக்கும் இடமளிக்காமல் செயல்படுமாறும், மேலும் ஒரு மாணவர் கூட விடுபடாமல் பெற்று வழங்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேலும் மாணவர்களுக்கு கல்வி உதவி தொகை பெற்று வழங்கப்படாமல் இருப்பின் இதனால் ஏற்படும் பின் விளைவுகளுக்கு சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியரே முழு பொறுப்பு ஏற்க நேரிடும் மற்றும் துறை ரீதியாக ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

2/5

06/7/22

பெறுநர்
தலைமை ஆசிரியர்கள்
அனைத்து வகை அரசு மற்றும் நிதி உதவி பெறும்
உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள்
வேலூர் மாவட்டம்.

நகல்
மாவட்டக் கல்வி அலுவலர், வேலூர் – தொடர் நடவடிக்கையின் பொருட்டு)

நகல்
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், வேலூர் அவர்களுக்கு தகவலுக்கான கனிவுடன் அனுப்பலாகிறது.